Y.M.C.A வாசிக

# மனித உரிமை மீறல்களுக்காக போராடும் அண்ணன் தமிழருக்கு எதிரான போருக்கு தலைமை தாங்கும் தம்பி

ஸ்ரீ லங்கா இராணுவத்தில் கஜபாகு படைப பிரிவைச் சேர்ந்த கேணல் ராஜபக்ஸ அடுத்த வருடத் தொடக்கத்தில் தமது பதவியைத் துறப்பார் எனத் தெரியவருகிறது இவர் அம்பாந்தோட்டை மாவட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி எம்பியான மகிந்த ராஜபக்ஸவின் சகோதரர் என்பதும் குறிப்பிடத்தக்கது. கடந்த ஜூனில் போர் ஆரம்பித்ததில் இருந்து இவர் தமிழ்த் தீவிரவாதிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளுக்கு தலைமைதாங்கியவர் என்றும், தற்பொழுது மணலாறு (வெலிஓயா) பகுதியில் உள்ள இராணுவத்தில் கடமையாற்றுகிறார் என்றும் தெரியவருகிறது இவரது சகோதரர் மகிந்த ராஜபக்ஸ எம். பி. இலங்கையில் நடக்கும் மனித உரிமை மீறல்கள் குறித்த பல ஆவணங்கள், நிழற் படங்களுடன் மாநாடு ஒன்றில் கலந்து கொள்வதற்காக புறப்பட்ட போது கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து அவரிடமிருந்த ஆவணங்கள், படங்கள் பறிமுதல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மாங்குளம் இராணுவ முகாமின் வீழ்ச்சியை அடுத்து இராணுவத்தின் பல உயர் அதிகாரிகள், அரசாங்கம் அளித்துள்ள சுயவிருப்பத்தின் பேரில் இளைப்பாறும் சலுகையைப் பயன் படுத்தி ஒய்வு பெற விண்ணப்பித்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 4-50

முரசொலி

முரசு 05 ஒலி 18 பிரமோதூத கார்த்திகை 29 (15-12-1990) சனி

## செஞ்சிலுவைச் சங்க தலைவர்கள் முன்பாக லொறிக்கிளீனர் தாக்கப்பட்டுக் கைது!

செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக கிளிநொச்சிக்கு பொருட்களை ஏற்றி வந்த லொறி ஒன்றின் கிளீனர் வவுனியாவில் வைத்து இராணுவத்தால் கைது செய்யப்பட்டுள்ளார். செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் முன்னிலையிலேயே இவர் கண்கள் கட்டப்பட்டு தாக்கப்பட்டதாகவும், பின்னர் முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக கொழும்பில் இருந்து வடபகுதிக்கு வந்துள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்க இலங்கைத் தலைவர் இராணுவ உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டபோது இராணுவம் தமது கட்டுப்பாட்டில் இல்லை என்றும் தாம் எதுவும் செய்ய முடியாது எனவும் கூறப்பட்டதாம். அச்சுவேலியைச் சேர்ந்த ஆர். சிறிதரன் (25) என்ற இளைஞரே இவ்வாறு கைதான கிளீனராவார். (35)

# வட - கிழக்கு மாகாணசபைக்கு அதிக நிதி

# பௌத்த பிக்கு புகார்

## அமைச்சின் தமிழ் அதிகாரி மீது சந்தேகம்

**வடக்கு கிழக்கு, மாகாணசபைக்கு அதன் வரவு செலவுத்திட்ட எல்லைக்கு மேலாக 30 லட்சம் ரூபா ஒதுக்கிடு செய்யப்பட்டுள்ளது என ஜனாதிபதிக்கு புகார் செய்யப்பட்டுள்ளது.**

வடக்கு, கிழக்கு பகுதியில் உள்ள பௌத்த விகாரை ஒன்றின் பிரதம குருவான சங்கைக்குரிய ஸ்ரீ கித்தலகம ஸ்ரீ சீலாலங்கார நாயக்கா தேரரே இவ்வாறு புகார் தெரிவித்துள்ளார்.

அமைச்சின் மூத்த தமிழ் அதிகாரி ஒருவரே இதற்குப் பொறுப்புஎன்றும் அவர் குறிப்

—04 ஆம் பக்கம் பார்க்க

மணலாறு, கொக்குத்தொடுவாயில்

## பாடசாலை மீது குண்டு வீச்சு ஒன்பது மாணவர்கள் காயம்

மணலாறு மாவட்டத்திலுள்ள கொக்குத்தொடுவாய் கிராமத்தில் அமைந்துள்ள தமிழ்க் கலவன் பாடசாலை மீது ''அவ்ரோ'' விமானம் குண்டு வீச்சுத் தாக்குதலை நடாத்தியது.

நேற்று முன்தினம் பிற்பகல் 1 மணியளவில் நடைபெற்ற இக் குண்டு வீச்சுத் தாக்குதலில் 9 மாணவர்கள் காயம் அடைந்தனர் வேலுப்பிள்ளை வடிவேலு என்பவரின் வீடு முற்றாகச் சேதமடைந்தது.

காயமடைந்த மாணவர்களின் விபரம்: சி. யோகராணி (12). இ. பர்மலதா (13), ப. கண்ணன் (13) இ. கமலாம்பிகை (13),

மூன்று மாதங்களுக்குரிய

## கசரோகம், புற்றுநோய் கொடுப்பனவு 17-ஆம் திகதி முதல் வழங்கப்படவுள்ளது

கசரோகம், தொழுநோய், புற்றுநோய்களுக்கான ஆகஸ்ட், செப்ரெம்பர், ஒக்டோபர் மாதங்களுக்கான கொடுப்பனவுகளும், யூலை மாதத்துக்கான பொதுசன மாதாந்த உதவிப்பணமும் வழங்கப்படவிருக்கின்றன

மேற்படி கொடுப்பனவுகள் கோப்பாய், யாழ்ப்பாணம், நெடுந்தீவு ஆகிய உதவி அரச அதிபர் பிரிவுகள் தவிர்ந்த ஏனைய உதவி அரச அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு 17-ந் திகதி திங்கட் கிழமை தொடக்கம் உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளிலும் உதவி அரச அதிபர்களால் குறித்துரைக்கப்படும் இடங்களிலும் வைத்து வழங்கப்படவிருக்கின்றது.

கோப்பாய், யாழ்ப்பாணம், நெடுந்தீவு உதவி அரச அதிபர்கள் இக் கொடுப்பனவிற்கான பணத்தினை யாழ்

—04 ஆம் பக்கம் பார்க்க

சத்திரசிகிச்சை உபகரணங்களை

## கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கும் எடுத்துவர அனுமதி இல்லை

கிளிநொச்சி அரசினர் ஆஸ்பத்திரிக்கென மூன்றரைக் கோடி ரூபா பெறுமதியான சத்திரசிகிச்சை உபகரணங்களையும் முக்கிய மருந்து வகைகளையும் கொண்டுவர எடுத்த முயற்சிக்கு கூட்டுப் படைத் தலைமையலுவலகம் தடைவிதித்துள்ளது

அமெரிக்க சார்பான மனித உரிமைகள் சங்கம் இவற்றை செஞ்சிலுவைச் சங்கம் மூலம் இங்கே அனுப்புவதற்கு அனுமதி கேட்டபோதே இவ்வாறு அனுமதி மறுக்கப்பட்டது (66

தமிழீழ எழுத்தாளர்களின்

## அச்சேறிய படைப்புக்களின் 10 பிரதிகள் வாங்கப்படும்

தமிழீழ எழுத்தாளர்களின் அச்சேறிய படைப்புக்கள் அனைத்திலும் 10 பிரதிகள் (றோனியோ) பதிப்புக்களையும் உடனடியாக கோண்டாவிலில் அமைந்திருக்கும் விடு

## குறைந்தளவு

குண்டு வீச்சுத் தாக்குதலை அடைந்தனா வேலுப்பிள்ளை

(13), ... இ. கமலாம்பிகை (13), அ.அன்னலட்சுமி (13), க. சிவநாத் (13), ந துரைராசா (13). க மங்கல ராணி (15).

இவர்கள் கொக்குத்தொடுவாயைச் சேர்ந்தவர்கள். ந.துரைராசா (13), கொக்குளாய். (71)

அனைத்திலும் 10 பிரதிகள் உடன் பணம் கொடுத்து வாங்குவதென விடுதலைப் புலிகளின் கலை கலாசாரப் பிரிவினர் தீர்மனித்துள்ளனர்.

படைப்பாளிகள் தங்கள் அச்சேறிய படைப்புக்களையும் கல்லச்சில் பதித்த

விலில் அமைந்திருக்கும் விடுதலைப்புலிகளின் கலைகலாசாரப் பிரிவு செயலகத்தில் ஒப்படைத்து அதற்கான பணத்தைப் பெற்றுக் கொள்ளும்படி விடுதலைப்புலிகளின் கலைகலசாரப் பிரிவு பொறுப்பாளர் புதுவை இரட்ணதுரை அறிவித்துள்ளார்.

— 4 ஆம் பக்கம் பார்க்க

# கிளிநொச்சியில் ஹெலி தாக்கி மூவர் படுகாயமடைந்தனர்

நேற்றுக் காலை 8 மணியளவில் பாரதிபுரத்திலிருந்து முரசுமோட்டைக்கு வயல் வேலை செய்வதற்காக இரண்டு டிராக்டர்களில் 70 பேர் கொண்ட விவசாயிகள் செல்லும் போது கிளிநொச்சி 55-ம் கட்டையில்வைத்து அவ்விடத்திற்கு வந்த ஹெலிகப்டர் ஒன்று சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்

—04 ஆம் பக்கம் பார்க்க

# கிழக்கு மாகாண அகதிகளின் விபரம் சேகரிக்கப்படுகின்றது

திருகோணமலை, அம்பாறை. மட்டக்களப்பு மாவட்டங்களிலிருந்தும், யாழ்ப்பாணக்குடாநாடடின் பல பகுதிகளிலிருந்தம் இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள அகதிக் குடும்பங்களுக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணப் பிரிவு, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் இணைந்து அரிசி. சீனி. மா,

—04 ஆம் பக்கம் பார்க்க

# அதிகாரிகள் கொழும்பு செல்ல கப்பல் மூலம் ஏற்பாடு

அத்தியாவசியமாகவும், உத்தியோகபூர்வமாகவும் கொழும்பு செல்லவிருப்பவர்களை கப்பல் மூலம் அழைத்துச் செல்வதற்கு ஆலோசிக்கப்பட்டு வருவதாக யாழ் செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

அரச, தனியார் துறையைச் சேர்ந்த பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளே இவ்வாறு

—04 ஆம் பக்கம் பார்க்க

# குடாநாட்டுத் தபால்கள் நேற்று எடுத்து வரப்பட்டன

கொழும்பிலிருந்து லங்கா சிறி கப்பலில் பருத்தித்துறைக்கு வந்த யாழ் குடாநாட்டுக்குரிய தபால் பொதிகள் யாவும் கப்பலில் இருந்து இறக்கப்பட்டு தபால் திணைக்கள உத்தியோகத்தர்களால் எடுத்துச்செல்லப்பட்டன.

யாழ் பிரதம தபாலக உத்தியோகத்தர்களாலும், ஊழியர்களாலும் 249 தபால்

—04 ஆம் பக்கம் பார்க்க

## யாழ் கல்வித் திணைக்களத்தில்

# 10 எழுதுவினைஞர்களுக்கு இடமாற்ற உத்தரவு

வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் வடக்குக் கிழக்கிலுள்ள கல்வித் திணைக்களங்களின் எழுதுவினைஞர்களிற்கு இடமாற்ற அறிவுறுத்தல் அனுப்பப்பட்டுள்ளது.

இவர்களது இடமாற்றங்கள் வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்குள்ளேயே நடைபெறும்.

யாழ் கல்வித் திணைக்களத்திலிருந்து சுமார் 10 பேருக்கு

— 4 ஆம் பக்கம் பார்க்க

# குறைந்தளவு முத்திரைகளே வந்துள்ளன

கொழும்பிலிருந்து லங்கா சிறிக் கப்பலில் வந்த தபால் பொதிகளில் இம்முறை குறைந்தளவு முத்திரைகளே வந்ததாக யாழ் தபால் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார் (33)

## இளைப்பாற

# விண்ணப்பித்த ஆசிரியருக்கு மார்கழி மாதச் சம்பளம் இல்லை

பொது நிர்வாக சுற்றறிக்கை இல 44/90 இன்கீழ் சுயவிருப்பப்படி 1. 1. 91ல் இருந்து இளைப்பாறுவதற்கு விண்ணப்பத்தை அனுப்பிய சகல ஆசிரியர்களின் மார்கழி 90ற்குரிய சம்பளத்தை வழங்க வேண்டாம் என யாழ்கல்விப் பணிப்பாளர் சம்பந்தப்பட்ட கோட்டக்கல்வி அதிகாரிகளை பணித்துள்ளார்.

மேலும் இவர்களுக்குகொடுபடவேண்டியுள்ள 1989 மார்கழிக்குரிய ஊக்குவிப்புப் பணத்தை இம்மாதம் கொடுக்குமாறும் அவர் அறிவித்துள்ளார். (ப-17)

# ஒரு வாரத்துக்கே 'திரிபோஷா,

போஷாக்குக் குறைபாட்டைத் தடுப்பதற்காக சுகாதாரத் திணைக்களம் அடுத்த நடவடிக்கையின் பலனாக 25 தொன் 'திரிபோஷா, யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளது.

—04 ஆம் பக்கம் பார்க்க

## சிறிய செய்திகள்

### மாணவர் இயக்க கலைநிகழ்ச்சிகள்

மாவீரர்தினத்தை முன்னிட்டு நடைபெற்ற கலை நிகழ்ச்சிகள் மாவீரரின்வீரம், தியாகம், தேசம் அவர்களை என்றும் மறக்காது என்ற உணர்வு மக்கள் போராட்டத்துடன் இணைய வேண்டிய தேவை போன்ற மையக் கருத்துகளைக் கொண்டிருந்தன.

நாடகங்களான ஈழத்துப் பரணி, போராட்டம் விழித்தெழுந்துவிட்டார்கள், புலிகளின் தாகம் தமிழீழத்தாயகம், கிழித்தெறிந்த முத்திரை, நாளை மலரும் தமிழீழம். இதைவிட வீரசுதந்திரம் வேண்டிநின்றார் பின்னர் வேறொன்று கொள்வாரோ என்ற பாரதியின்வாக்கு தமிழ் ஈழத்தில் பலித்ததா என்ற தலைப்பில் பட்டிமன்றமும் இடம்பெற்றது.

மாணங்காத்த மாவீரர் என்ற வில்லிசையும் மறக்க முடியா புரட்சிவீரன் என்ற வில்லிசையும் இடம்பெற்றன.

### இலங்கை வங்கி மக்கள் வங்கி மக்கள் மயமாக

இலங்கை வங்கியையும், மக்கள் வங்கியையும் மக்கள் மயப்படுத்தும் திட்டம் எதுவும் கிடையாதென நிதியமைச்சு அறிவித்துள்ளது.

இந்த இருவங்கிகளும் கடும் போட்டியை எதிர்நோக்குவதனாலும் எந்தவித ஏகபோக உரிமையையும் அவை கொண்டிருக்காததாலும் அவற்றை மக்கள் மயப்படுத்துவது அவசியமல்ல, இது வெறும் ஊகத்தின் அடிப்படையானதே என்றும் அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சம்பளப் பணம் திருட்டு

கிளிநொச்சி அரசினர் ஆஸ்பத்திரி மாவட்ட வைத்திய அதிகாரியின் விடுதியில் இருந்து பதினோராயிரம் ரூபா திருடப்பட்டுள்ளது.

இம் மருத்துவமனையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு வழங்கவென கொண்டுவரப்பட்ட சம்பள மீதிப்பணமே இவ்வாறு திருடப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் இருந்து இராணுவம் வாபஸானபோது ஆஸ்பத்திரியில் இருந்த பாதுகாப்பு பெட்டகமும் உடைக்

### செஞ்சிலுவை ஆதரவு உலக சித்திரப்போட்டி

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளை உலக சித்திரப் போட்டி, கண்காட்சி ஒன்றினை நடாத்தவுள்ளது.

ஒவ்வோர் ஆண்டும் உலகின் பல பகுதிகள் வெள்ளம் புயல், மண்சரிவு, வரட்சி காட்டுத்தீ, நிலநடுக்கம், பூகம்பம் என்பவற்றால் பாதிக்கப்படுகின்றன அதே போல் யுத்தநிலை போன்ற மனிதனால் ஏற்படும் அழிவுகள், காற்று, நீர், மண் ஆகியவற்றை மாசுபடுத்தல், பட்டினிச்சாவு, போன்ற அழிவுகளுக்கான பொறுப்பு மனிதனையும் இயற்கையையும் சாரும். எனவே சிறார்களே, இளைஞர்களே நீங்கள் நேரில் கண்ட, அல்லது கேட்டறிந்த அழிவுகளை உங்கள் சுயகண்ணோட்டத்தில் சித்திரமாக வரைந்து அனுப்புங்கள் எனக் கோரப்பட்டுள்ளது.

நமது நடுவர் குழுவினால் தரமானதெனக் கணிக்கப்படும் படைப்புக்கள் அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் 7-ம் திகதி ஜெனிவாவில் நடைபெறவுள்ள உலக சுகாதாரத் தினக் கண்காட்சியிலும், ஸ்பெயினில் செவிலின் நகரில் நடைபெறவுள்ள எக்ஸ்போ 92 காட்சியரங்கில் அனைத்துலகச் செஞ்சிலுவைச் செம்பிறை இயக்கத்திலும் இடம்பெ வாய்புண்டு எனத் தெரிவிக்கப்படுகிறது.

சித்திரம் 18''/22'' உட்பட்டதாக அமைய வேண்டும், முடிவுத் திகதி தை 1-ம் திகதி. வயதெல்லை 2—18 எனவும் அறிவிக்கப்படுகிறது.

மேலும் விவரங்களுக்கு 73, கண்டிவீதியிலுள்ள அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் தெரிவிக்கப்படுகிறது.

### கோப்பாய்ப் பிரிவு பயிலுநர் ஆசிரியர் தலைமைத்துவ பயிற்சி

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பகுதி பயிலுநர் ஆசிரியர்கள் யாவருக்கும் தலைமைத்துவப் பயிற்சி வழங்குவதற்கான செயற்திட்டம் ஒன்று தயாரிப்பதற்கு இன்று சனிக்கிழமை பகல் 2 மணிக்கு புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தாக் கல்லூரிக்கு சமுகம் தருமாறு பயிலுநர் ஆசிரியர் சங்கத்தலைவர் பு. ஸ்ரீஸ்கந்தராசா கேட்டுள்ளார்.

தொண்டமானாறு வெளிக்

---

வெளிநாடுகளிலிருந்து பெறப்படும்பெருந்தொகைநிதிக்குஎன்ன நடக்கிறது?

# அரச சார்பற்ற நிறுவனங்கள் மீதுசந்தேகம்!

## ஆராயுமாறு பணிப்பு; கட்டுப்படுத்த திட்டம்

அரச் சார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் நடவடிக்கைகளைக் கண்காணித்து அவற்றைக் கட்டுப்படுத்த அரசு உத்தரவிட்டுள்ளது.

அரச சார்பற்ற நிறுவனங்கள் சமூகப்பணிக்கென வெளிநாடுகளிலிருந்து நிதியைப் பெற்று அவற்றில் பெரும் பகுதியை அரசுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதாக சந்தேகிக்கப்படுவதாகவும் இதனாலேயே இப்புதிய கட்டுப்பாட்டை அமுலாக்குமாறு பணிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஒவ்வொரு தொண்டர் நிறுவனமும் எங்கிருந்து நிதியைப் பெறுகின்றன என்பதைப் பற்றியும், அவ்வாறு பெறப்படும் நிதி எவ்வாறு செலவிடப்படுகின்றது என்பது பற்றியும் தனித்தனியாக ஆராயுமாறு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு அதிகாரிகளைப் பணித்துள்ளது.

அத்துடன்இந்த நிதி பெறப்படுவது பற்றி முன்கூட்டியே சம்பந்தப்பட்ட தொண்டர் நிறுவனங்களால் அரசுக்கு அறிவிக்கப்படுகிறதா? பெறப்படும் நிதி அரசுக்கூடாகப் பெறப்படுகிறதா? என்பது பற்றியெல்லாம்ஆராயுமாறும் பணிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அறிக்கையொன்றை தயாரித்து இரண்டொரு மாதத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின் அடிப்படையில் அரச சார்பற்ற நிறுவனங்களின் நடவடிக்கைகளை மேலும் கட்டுப்படுத்தக்கூடிய வகையில் சில சட்டத் திருத்தங்கள் கொண்டு வரப்படவுள்ளதாகவும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்பொழுது இலங்கையில் சுமார் இரண்டாயிரம் அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் இயங்கி வருவதாகவும் இவற்றில் அனேகமானவை பதியப்படாமலேயே இயங்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

### கனடியதூதுவராலயத்தின்முன் கடும் தவம்- இரவு பகலாக

கொழும்பிலுள்ள கனடிய உயர் ஸ்தானிகராலயத்தின் முன்னால் அதிகாலை வேளையிலேயே பெரும் சனக் கூட்டத்தைக் காண முடிகின்றது.

கனடாவுக்கு செல்வதற்காக விஸா பெறவேண்டியுள்ளோரே அதிகாலைவேளையிலும் ஸ்தானிகராலயத்தை இவ்வாறு'முற்றுகை' யிட்டு வருகின்றனர்.

ஸ்தானிகராலய பிரதான நுழைவாயிலுக்கு எவ்வளவு கிட்டப் போகமுடியுமோ அவ்வளவு அண்மித்ததாக பத்திரிகைகள், படுக்கைவிரிப்புக்களை விரித்துவிட்டு அதிகாலை வேளையில் பனியையும் பொருட்படுத்தாது எப்போது விடியும், நுழைவாயில் எப்போதுதிறக்கப்படும் என எதிர்பார்த்த வண்ணம் இவர்கள் அமர்ந்திருக்கும் காட்சியைத் தினமும் காணமுடியும்.

காலை 8 மணிக்கு கனடியஸ்தானிகராலயம் திறக்கப்படும் வேளையில் ஆகக்குறைந்தது 50 பேராவது அங்கு குழுமி நிற்பது வழமையாகிவிட்டது:

இதேபோல் கொழும்பிலுள்ள மற்றைய மேற்கு நாடுகளின் உயர் ஸ்தானிகராலய அலுவலகங்களின் முன்னாலும் அதிகாலை வேளையில் இத்தகைய 'முற்றுகையை' தினமும் காணமுடிகிறதாம்.

இதில் விசேடம் என்னவென்றால் இவ்வாறு விஸாவுக்காகத் தவம் கிடப்போரில் பெரும்பாலானோர் வடக்குக் கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்தோர் என்பதே.

### 65 ஆயிரம்ரூபா கொள்ளை 3 பிக்கு மாணவர் கைது

கொள்ளை தொடர்பாக மூன்னாள் பிக்கு மாணவர்கள் மூவர்கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொஸ்கமப் பொலிஸார் அறுபத்தையாயிரம் ரூபா ரொக்கப்பணம் கொள்ளை தொடர்பாக இவர்களைக் கைது செய்துள்ளனர்.

இம்மூவரும் ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவர்கள் என அறிவிக்கப்படுகின்றது.

### அகில இலங்கை ரீதியில்

### பயிற்றப்படாத சகல ஆசிரியர்களுக்கும் பயிற்சி

கல்வியமைச்சு 1994-ம் ஆண்டுக்கு முன்னதாக பயிற்றப்படாத சகல ஆசிரியர்களுக்கும் பயிற்சியளிக்க உத்தேசித்துள்ளது.

சுமார் 75 ஆயிரம் பயிற்றப்படாத ஆசிரியர்கள் இருப்பதாகத் தெரியவருகிறது.

ஆசிரியர் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக இந்நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### பரிசளிப்பு

அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நடாத்திய சிறந்த கிளை, மொத்த நிலையங்களைத் தெரிவு செய்தல் ''போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற'' புஸ்பவதி (இல. 07) கிளை நிலையத்துக்குரிய பரிசும், சான்றிதழும் அக்கிளை முகாமையாளர் த. ரகீம்ராஜுக்கும், மொத்த நிலையங்களில் முதலாம் இடத்தைப் பெற்ற 'புடவை விற்பனைநிலையத்துக்குரிய பரிசும், சான்றிதழும் அதன் முகாமையாளரான தி. தாமரைச் செல்வனுக்கும் சங்கத்தில் நடந்த சிறப்பு வைபவத்தில் வைத்து வழங்கப்பட்டது.

2-ம், 3-ம் இடங்களைப் பெற்ற கிளைகளுக்கும் பரிசும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. அத்துடன் போட்டியில் முதலாம் இடங்களைப் பெற்ற கிளை, மொத்த நிலைய முகாமையாளர்களுக்கு விசேட வருடாந்த உயர்ச்சிப்படியும் வழங்கப்பட இருப்பதாக சங்கத் தலைவர் தி. கமலநாதன் தெரிவித்துள்ளார். (ப-24)


### சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) 'மண்டேலா ரேடர்' இல 256 A, பருத்தித்துறை வீதி, நல்லூர். 'அரஸ் ஜவுளியகம்' 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். 12073

நுரைவளம் மிக்க மில்க்வைற் சலவைப் பவுடர் துணியின் நூலிழைகளினூடே செறிந்து துரிதமாக அழுக்கை முற்றாக அகற்றி பளிச்சிடும் வெண்மையைத் தருகிறது. 100 சிறிய அளவு பைக்கற் தரும் அன்பளிப்பு - ஒரு லேஞ்சி. மில்க் வைற் - யாழ்ப்பாணம். 12094

PERSONAL CLASSES
B. M. C. முன்லேன் - யாழ்ப்பாணம்

பட்ட சம்பள மீதிப்பணமே இவ்வாறு திருடப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் இருந்து இராணுவம் வாபஸானபோது ஆஸ்பத்திரியில் இருந்த பாது காப்பு பெட்டகமும் உடைக் கப்பட்டது குறிப்பிடத்தக் கது. (35)

## உப்பள ஊழியர் கூட்டம்

தேசிய உப்புக் கூட்டுத் தாபன வடபகுதி உப்பள ஊழியர்களின் வேலை விடய மான முக்கிய கூட்டமொன்று நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிகசு உசன் இராமநாதன் மகாவித்தியால யத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு உப்பள ஊழியர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு உப்புக் கூட்டுத்தாபன உற்பத்தி முகாமையாளர் நி. ஸ்ரீ இராம நாதன் கேட்டுள்ளார்.

★ ★ ★

ஆனையிறவு உபபளத்தில் வேலை செய்து, தற்சமயம் இடம் பெயர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தில் தங்கியுள்ள ஊழியர்களை 17-ம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிகசு பரந்தன் - முரசு மோட்டையில் இயங்கும் மக் கள் வங்கிக் கட்டிடத்தில் வட பிராந்திய முகாமையாளரைச் சந்திக்குமாறு வடபிராந்திய முகாமையாளர் செ. வேலா யுதபிள்ளை கேட்டுள்ளார்.

2 மணிக்கு புத்தூர் ஸ்ரீசோமஸ் கந்தாக் கல்லூரிக்கு சமூகம் தருமாறு பயிலுநர் ஆசிரியர் சங்கத்தலைவர் பு. ஸ்ரீஸ்கந்த ராசா கேட்டுள்ளார்.

தொண்டமானாறு வெளிக் கள நிலையப் பிரதிநிதிகளும் கோட்டக்கல்வி அதிகாரி ஒருவரும் இக்கூட்டத்திற்கு அழைக்கப்பட்டுள்ளதாகவும், கூட்டத்திற்கு வருகை தந்து தமது பெயரைப் பதிவு செய் யாதோர் பயிற்சி நெறியில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்கள் எனவும் அறி விக்கப்பட்டுள்ளது.

## நெல்லியடியில் தென்தமிழீழ ஆதரவுக் கூட்டம்

தென்தமிழீழ மக்களுக்கு உதவுவோம் எனும் தலைப பில் எட்டுச் சிற்றூரவைகள் இணைந்து நெல்லியடியில் நடாத்திய கூட்டத்தில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

நேற்று முன்தினம் மாலை 6 மணிக்கு இறந்த போராளி பாபுவின் தந்தை மங்கள விளக்கேற்றிக் கூட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

இதில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் முக் கியஸ்தர்கள் தினேஷ், வர தன், யாழ் மாவட்டப் பொறுப்பாளர் ஆஞ்சநேயர் மற்றும் சிற்றூரவைத் தலை வர்களும் உரையாற்றினர். (71)

கொஸ்கமப் பொலிஸார் அறுபத்தையாயிரம் ரூபா ரொக்கப்பணம் கொள்ளை

புர பல்கலைக்கழக மாணவர் கள் என அறிவிக்கப்படுகின் றது.

### அகில இலங்கை ரீதியில்

## பொறியியல் துறை உச்சப்புள்ளி ஹாட்லி மாணவருக்கு

அண்மையில் வெளியான க. பொ. த, (உயர்தர) ப்பரீட் சையின் வெட்டுப்புள்ளி அட்ட வணையின் படி பருத்தித் துறை ஹாட்லிக் கல்லூரியிலி ருந்து பல்கலைக் கழகத்திற்கு 64 மாணவர்கள் செல்லவுள் ளனர்.

மருத்துவத துறைக்கு 05 பேரும் விவசாயத்துறைக்கு 04 பேரும் உயிரியல் விஞ்ஞா னத்துறைக்கு ஒருவரும் பொறியியல் I துறைக்கு 18 பேரும், பொறியியல் II துறைக்கு 08 பேரும், பௌதிக விஞ்ஞானத்துறைக்கு 19 பேரும் முகாமைத்துவ துறைக்கு 05 பேரும் வர்த்த கத்துறைக்கு 04 பேரும் செல் லவுள்ளனர்.

அகில இலங்கை ரீதியில் பொறியியல் துறைக்கு உச்சப் புள்ளியை(366)பெற்ற மாண வரும் யாழ் மாவட்டத்தில் வர்த்தகத்துறைக்கு உச்சப் புள்ளியைப் பெற்ற மாணவ ரும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த மாண வர்கள் என்பதும் குறிப்பிடத் தக்கது (15)

## வியட்நாமியரால் அமெரிக்கர் விரட்டப்பட்டது நினைவூட்டல்

''பதினைந்து வருடங்களுக்கு முன் வியட்கொங் கெரில்லாக் கள் வியட்நாமிலிருந்து அமெரிக்கர்களை விரட்டியடித்தனர் என் பதனை அரசுக்கு நினைவுபடுதத விரும்புகின்றேன்.'' என்று திரு அனுரா பண்டாரநாயகா எம். பி. சமீபத்தில் பாராளுமன் றத்தில் பேசுகையில் கூறினார்.

''விடுதலைப் புலிகளும் வியட்கொங் கெரில்லாத் தந்திரோ பாயத்தைக் கையாளுகின்றனர்'' என்று அங்கு பேசுகையில் மேலும் குறிப்பிட்டார்.

வடக்கு, கிழக்கு இணைப்புப் பற்றியும் அவர் விமர்சித்தார்.

PERSONAL CLASSES

B. M. C. முன்லேன் - யாழ்ப்பாணம்

A/L 92 தூய / பிரயோக கணிதம்
திரு. வேலாயுதம் B. Sc. (Cey)

ஆரம்பம்: 15 - 12 - 90

சனிக்கிழமை பி. ப. 4.00 மணி

(A/L 91 & 90 பிரிவுகளும் ஆரம்பமாகின்றன)

விபரங்கள் நேரில்

12099

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

யாழ்ப்பாணக் கிளை

அங்கத்தவர்களுக்கான அறிவித்தல்

சகல அங்கத்தவர்களும் 1991-ம் ஆண்டுக்கான தங்கள் அங்கத்துவத்தை 1991-ம் ஆண்டு ஜனவரி மாதம் 31-ம் திகதிக்கு முன்பதாகப் புதுப்பித்து உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படு கிறார்கள்.

செயலாளர்,
இலங்கை செஞ்சிலுவைச்சங்கம்,
யாழ்பபாணக் கிளை

இல.73,கண்டிவீதி,
யாழ்ப்பாணம்.
1990. 12. 15

12097

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி

# 4 கல்விப் பிரிவுகளை இணைத்து

## வன்னி கல்விப்பிராந்தியம் அமைப்பு

தனித்தனி கல்வி மாவட்டங்களாகத்தற்போது இயங்கி வரும் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சிப் பகுதிகள் நான்கும் வடகிழக்கில் மேற்கொள்ளப்படவிருக்கும் கல்வி நிருவாக சீரமைப்புக் காரணமாக தனியான ஒரு கல்விப் பிராந்தியமாக மாற்றப்படவிருக்கின்றன.

நாலு கல்வி மாவட்டங்களும் ஒன்றிணையும் இந்தப் பிரிவு வன்னி கல்விப் பிராந்தியம் என பெயர் சூட்டப்படும்

உத்தேச சீரமைப்பின் பிரகாரம் வடகிழக்கு மாகாணத்தில் ஐந்துகல்விப் பிராந்தியங்கள் இயங்கும். அவையாவன: யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, வன்னி, அம்பாறை என தெரிவிக்கப்படுகின்றது. (11)

பல்கலை மாணவருக்கான

# உதவிப் பண வருமான மட்டம் 32ஆயிரம் ரூபாவாக அதிகரிப்பு

யாழ் பல்கலைக்கழக மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்கான வருமான மட்டம் அதிகரிக்கப்பட்டுள்ளது இதுவரை காலமும் வருடாந்தம் 23,000 ரூபாவுக்குக் குறைந்த வருமானத்தைப் பெறும் பெற்றோரின் பிள்ளைகளுக்கே பல்கலைக்கழகத்தில் உதவிப் பணம் வழங்கப்பட்டுவந்தது.

ஆனால் இந்த வருமான மட்டம் தற்பொழுது 32,000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதனால் மேலும் அதிகமான மாணவர்கள் உதவிப் பணத்தைப் பெறும் தகைமையைப் பெற்றுள்ளனர்

இப்புதிய அறிவிப்பின் கீழ் உதவிப்பணம் பெறத் தகுதியான மாணவர்கள் அதற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (74)

# இரவு பகலாக உற்பத்தி

## ஆனால் தேவையும் குறைந்தபாடாகஇல்லை

கொழும்பிலுள்ள செயற்கை அவயவம் பொருத்தும் நட்புறவுச்சங்கத் தொழிலகம் தற்பொழுது இரவு பகலாகச் செயற்பட்டு வருகின்றது.

சனி, ஞாயிறு விடுமுறை தினங்களில்கூட இந்த தொழிற்சாலை மூடப்படுவது கிடையாதாம்.

இந்த தொழிற்சாலையின் மூலமாகவே யாழ்ப்பாணத்திலுள்ள அன்னையர் முன்னணியின் ஆதரவிலான ஜெய்பூர் செயற்கை அவயவத் தொழிற்சாலைககு செயறகை அவயவங்கள் கிடைத்து வருகின்றன.

கொழும்பு நட்புறவுச்சங்கத் தொழிற்சாலை இரவு பகல் ஒய்வு இன்றி இயங்கியபோதிலும் நான்கு, ஐந்து பாத அளவுகளையுடைய செயற்கைகால்களுக்கு உள்ள தட்டுப்பாடு நீங்கியபாடாக இல்லையாம்.

இந்த அளவுகளே சாதாரணமாக 19—35 வயதினை உடையோருக்கு உரியவையாகும்.

வடக்கு கிழக்கு இராணுவ நடவடிக்கைகளினால் முன்னெப்போதுமில்லாதளவில் இராணுவத்தினர் தமது கால்களை இழந்து வருவதே இவையெல்லாவற்றிற்கும் காரணமாம். (74)

# மரணித்தவீரர்க்கு கௌரவம்

மட்டுவில் வடக்குப் பிரதேசத்தில் மாவீரர்களின் நினைவாக பாலன், மாறன், வினோத், ரேகா, ஜோதிரவி, சின்னவின்சன் ஆகியோரின் பெயரில் வீதிகள் திறக்கப்பட்டுள்ளன மாவீரர் தினத்திற்கு முன்பே கீதன், கர்ணன், விஜி வீதிகள் திறக்கப்பட்டுள்ளன. மாவீரர்களான மாறன், கீதன், கர்ணன், விஜி, சின்ன வின்சன் ஆகியோரின் நினைவுருவப் படங்கள் புத்தூர் வீதிகள் கர்ணன் வீதிச் சந்தியில் அமைக்கப்பட்டுள்ளன.

மாவீரர் நினைவாக சரசாலை தெற்கு சின்ன வின்சன் வீதியில் மாவீரர் சனசமூக நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. மட்டுவில் வடக்கு செல்வவிநாயகர் சனசமூக நிலையத்தினரின் முயற்சியினால் பாலர் பாடசாலை ஒன்றுஉருவாக்கப்பட்டுள்ளது.

மாவீரர் நினைவாக சரசாலை தெற்கு சரஸ்வதி வித்தியசாலையில் சோபன் மண்டபம் ஒன்றும் சரசாலை மத்தியில் சின்னவின்சன் மண்டபம் ஒன்றும் திறந்துவைக்கப்பட்டுள்ளன மட்டுவில்தெற்கு ஐங்கரன் சனசமூக நிலையத்தினரின் முயற்சியில் பாலர் பாடசாலை ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

# ஆண்டுக் கூட்டம் நடாத்தப் பணிப்பு

யாழ் மாநகர சபை எல்லைக்குட்பட்ட பதிவு செய்யப்பட்டு, இயங்குகின்ற எல்லாச் சனசமூக நிலையங்களும் தங்களது வருடாந்த ஆண்டுப் பொதுக் கூட்டத்தை டிசம்பர் மாதம் 31-ந் திகதிக்கு முன்னர் நடாத்தி புதிய ஆண்டுக்கான ஆட்சிக்குழு உறுப்பினரின் விபரங்கள் அடங்கிய பட்டியலை 1991 ஜனவரி 10 ந் திகதிக்கு

உல்லாசபுரி உருக்குலைகிறது

# திருமலை கடற்கரையில் குரங்குகள் கும்மாளம்

திருமலையின் புகழ் பெற்ற கடற்கரைகளை நாய்களும், குரங்குகளுமே தற்போது ஆக்கிரமித்துள்ளன என ராய்ட்டர் செய்தி தெரிவித்தது.

...வேயே சிறந்த

மற்றைய இடங்களில் நாய்கள் விளையாடுவதையும், குரங்குகள் பாய்ந்து தாவுவதையுமே காணமுடிகின்றது.

உல்லாசப் பயணிகளைக் கவர்ந்த இடமாக விளங்கிய

# பலாலி தளமான கதை [5]

### வடபகுதியில் நிரந்தரமாக இராணுவம்

இதனால் உடுகமவின் சிபாரிசின் பேரில் இராணுவ முகாம் வடபகுதிக்கு நிரந்தரமாக அமைக்கத் தீர்மானிக்கப்பட்டது மறியல் போராட்டத்தடை அதிகாரிகள் வருகைக்கு தடையாக இருக்காத விதத்தில் இராணுவத்துக்கான வாகனங்கள், கூடாரங்கள், தளபாடங்கள் கப்பலில் கொண்டுவந்து சேர்க்க வசதியான இடத்தில், அமைச்சர்கள் வந்து தங்க பாதுகாப்புக்கூடிய அமைவிடம் தேடப்பட்டது சகல விதத்திலும் 'பலாலி' முகாமுக்குரிய இடமாகச் சிபாரிசு செய்யப்பட்டது. பலாலி விமானத் தளத்துக்கென பிரித்தானிய விமானப்படையால் கட்டப்பட்ட 'அதிகாரிகளின் விடுதி' (Officers Mess) தகுந்த இடமாக தெரிந்தெடுக்கப்பட்டது. இதனுடன் இணைந்துள்ள விமானச் சிப்பாய்களின் விடுதி (Airmen Mess)யும் இதற்கென இணைக்கப்பட்டது. 'சார்ஜன்ட் விடுதி' (Sergeants Mess) உம் வேறு சில கட்டிடங்களும் ஆசிரிய கல்லூரிக்கு விடப்பட்டது. சத்தியாக்கிரகம் அடக்கப்பட்டாலும் இராணுவமுகாம் பலாலியில் நிரந்தரக் 'குடியிருப்பைப்' பெற்றது. சட்டவிரோதக் குடியேற்றம், கள்ளக்கடத்தல் தடுப்புக்கென தடுப்பு முகாம்கள் கரையோரப் பகுதிகளில் அமைக்கப்பட்டன இந்தக் கடமைக்கெனவே இராணுவம் நிலைகொண்டது. மக்கள் இதனை விரும்பவில்லை. தமது எதிர்ப்பைக் காட்டினர். எனினும் முகாம் நிரந்தரமாக நிலைகொண்டது. ஆயினும் சிவில் நிர்வாகத்திலோ, சாதாரண சட்ட நடவடிக்கைகளிலோ இராணுவம் தலையிட அனுமதிக்கப்படவில்லை.

### முரண்பாடு

உள்ளூர் மக்களுடன் இடைக்கிடை முரண்பாடுகள் வளர்ந்தன. இடைக்கிடை உறவுகளும் இருந்தன. ஒருமுறை வயாவிளான் மடத்தடிப்பகுதியில் மது அருந்தச் சென்ற இராணுவத்துக்கும் மக்களுக்கும் இடையில் பகைமை வெளிப்பட்டது. இராணுவ வாகனத்தின் 'ரயர்' (Tyre) கத்தியால் குத்திக் கிழிக்கப்பட்டது. இராணுவத்துக்கும் பொது மக்களுக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டது. வாகனத்தையும் விட்டு சிப்பாய்கள் முகாமுக்கு ஓடினர். பின்விளைவு பற்றி மக்கள் பயந்தனர். மூன்று மணிநேரம் கழிந்தது. இராணுவ முகாமிலிருந்து வேறொரு வாகனம் குறிப்பிட்ட இடத்துக்கு விரைந்தது மக்கள் கத்திகள், பொல்லுகள், கல்லுகளுடன் காவல் நின்றனர். இராணுவம் சுடமாட்டாதென்ற நம்பிக்கையும் இருந்தது.

வந்தவாகனம் அவ்விடத்தில் வந்து நின்றது. 'ரயர்' கிழிக்கப்பட்ட வாகனத்துடன் கம்பியால் இணைக்கப்பட்டது. வாகனம் முகாம் நோக்கித் திரும்பிச் சென்றது. சம்பந்தப்பட்ட இராணுவச் சிப்பாய்களுக்கு பொதுமக்களுடன் முரண்பட்டதற்காக தண்டனை வழங்கப்படும் எனவும் மக்களுக்கு அறிவிக்கப்பட்டது. எதிர்பார்த்த எதுவுமே நடக்கவில்லை.

சிவில் விமானப்போக்குவரத்து 'இலங்கை விமானச்சேவை' (Air Ceylon) யினால் தொடர்ந்து நடைபெற்றது. பிரயாணிகளைக் கவரும் உத்திகளும் மேற்கொள்ளப்பட்டன.

### சிற்றம்பலம் கார்டினருக்காக..

இணைந்தும், இணையாமலுமிருந்த இரு பெரும் தலைவர்கள்-ஸ்ரீலங்காவின் பிரதமர் ஒருவரை வரவேற்க பலாலியை மையமாக வைத்து நடாத்திய ஒரு 'போராட்டமும்' இரசனை நிறைந்தது.

1966 ஆம் ஆண்டு...

தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தேசிய மகாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அப்போதைய ஸ்ரீலங்காப் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா. அவர் பிரதம விருந்தினராக திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தினால் அழைக்கப்பட்டிருந்தார். அப்போதைய காங்கேசன்துறைப் பாராளுமன்ற உறுப்பினர்-தமிழரசுக்கட்சித் தலைவர்- திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் ஆவார். பிரதமர் பலாலி விமான நிலையத்தில் வந்து இறங்குவதாக ஏற்பாடாகியது. அங்கிருந்தே மகாநாட்டுக்கு செல்ல ஒழுங்கு செய்யப்பட்டது பலாலிக்கு வந்திறங்கும் பிரதமரை வரவேற்று மாலை அணிவிப்பது யார்?- இது பிரச்சினையாக மாறியது எதிரும்-புதிருமாக விருந்த இரு தலைவர்களுக்குமிடையே போட்டிக் கருத்துக்கள் வலுத்தன.

பலாலி விமானநிலையம் அமைந்திருக்கும் காங்கேசன்துறைத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் மாலைபோட்டு வரவேற்பதா? மாநாட்டுக்கு அழைத்த காங்கிரஸ் கட்சிக்காரரா் மாலைபோட்டு வரவேற்பதா? இரண்டு தலைவர்களும் தம்பக்க நியாயங்களைப் பற்றிப்பிடித்தனர்.

பிரதமர் டட்லிக்கு இது பெரும் சிக்கலை ஏற்படுத்தியது. இரண்டு பக்கமும் நியாயமிருப்பதாக அவர் உணர்ந்தார். இதனைச் 'சமாளிக்கும்' வழிமுறை பற்றிச் சிந்திக்கலானார். பாரர்ளுமன்ற அரசியலின் 'குறுக்குமூளை' அவருககு வேலை செய்தது.

பலாலிக்கு விமானத்தில்வரும் பயணம் இரத்தாகியது அனுராதபுரம்வரை விமானத்தில் வந்த பிரதமருக்கு யாழ்ப்பாணம் வருவதற்கு விசேட புகையிரதம் ஒழுங்கு செய்யப்பட்டது.புகையிரதம்யாழ்ப்பாணத்தில்நிறுத்த

**க. இராசதுரை**

ஏற்பாடாகியது. பாராளுமன்றத்தின் யாழ்ப்பாணப் பிரதிநிதி திரு. ஜி. ஜி. பொன்னம்பலமே தமிழ்க் காங்கிரஸ்கட்சித் தலைவரும் அவரே. மகாநாட்டுக்கு அழைத்தவரும் அவரே. யாழ்ப்பாணப் புகையிரத நிலையத்துக்கு வந்து இறங்கவுள்ள பிரதமர் டட்லியை அவர் வரவேற்க, அவரது கட்சிக்காரரொருவர் மாலைபோட்டு வரவேற்க முழுத்தகுதியும் காங்கிரசுக்கே கிடைக்கிறது.

### பிரமுகர்கள் வருகை

சிவில் விமானச் சேவை தாராளமாக நடைபெற்று வந்தது. இந்தியக் கலைஞர்கள் இங்குவந்திறங்கினர். அரசியல் தலைவர்கள் அடிக்கடி வந்து சென்றனர். மதப் பெரியார்கள் மக்களை நாடி வந்து சென்றனர். விஞ்ஞானிகளும், விருதுபடைத்தவர்களும் விருநதோம்பவும், விருப பியும் வந்தனர். 'பலாலி' அவர்களை வரவேற்கும் நிலைத் தளமாகியது.

ஆசியாவிலேயே சிறந்த கடற்கரைகளில் ஒன்றாக விளங்கும் திருமலைக் கடற்கரையில் ஒரு சில உல்லாசப் பயணிகளே காணப்படுகின்றனர்.

...கவாநத இடமாக விளங்கிய இந்த இயற்கைத்துறைமுக நகரம் உள்நாட்டு யுத்தத்தினால் தற்போது சோபை இழந்து காணப்படுவதாக அச் செய்தி மேலும் தெரிவித்தது. (11)

1991 ஜனவரி 10 ந் திகதிக்கு முன்னர் யாழ் மாநகர சன சமூக நிலையங்களின் சமாசத்துக்கு அனுப்பி வைக்கவேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (47)

# ஜே. வி. பியில் 3 போட்டிக் குழுக்கள்

## சோமவன்ச மாரவிலவிலிருந்து தப்பிச் சென்றார்

ஜே. வி. பி. இயக்கததில் மூன்று போட்டிக்குழுக்கள் உருவாகி செயற்பட்டு வருவதாகவும், அவற்றுள் இளைஞர்களை மடடும் அங்கத்தவர்களாகக் கொண்டுள்ள மூன்றாவது குழு மிகத் தீவிரமாகச் செயற்பட முயன்று வருவதாகவும் பாதுகாப்பு வடடாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த மூன்றாவது குழு யார் தலைமையில் செயற்படுகிறது என்பது பற்றி சரியான தகவல்கள் கிடைக்கவில்லையெனவும், எனினும் இளைஞர்களைக்கூடுதலாக சேர்த்து தீவிரமாக செயற்பட இப்பிரிவு முயற்சிப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது

மற்றைய இரு பிரிவுகளில் ஒன்று தயாவன்னி ஆராட்சி தலைமையிலானது. இவர் அண்மையில் படையினரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

ஜே வி. பி. இயக்கத்தில் தற்போது உயிருடன் உள்ள ஒரேயொரு மூத்த உறுப்பினரான சோமவன்ச அமரசிங்க எஞ்சிய அணிக்கு தலைமை தாங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

றெஜினோல்ட் பற்றிக் என்ற பெயரில் நடமாடி வந்த இவர் சில தினங்களுக்கு முன்னர்தென்னிந்தியாவுக்குத் தப்பிச் சென்றதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவர் நீர்கொழும்பில் உள்ள மாரவில என்ற இடத்திலிருந்து மீன்பிடிப்படகு ஒன்றின்மூலம் தென் இந்தியாவுக்குத் தப்பிச் சென்றார்

இவர் இந்தியாவுக்கு தப்பிச் செல்ல உதவியதாக இரண்டு கடத்தல்காரர்களும் ஒரு இராணுவ அதிகாரியும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்பிலிருந்து தென் இந்தியாவுக்குத் தப்பிச் செல்ல படகுக் கட்டணமாக 15,000 ரூபாவை சோமவன்ச அமரசிங்க செலுத்தியதாக விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது

இவர் தப்பிச் செல்வதற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் இவரது மனைவி போலி கடவுச்சீட்டு ஒன்றின் உதவியுடன் விமான மூலம் இந்தியாவுக்கு சென்றிருந்ததாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

---

ஒருமுறை விமானம் ஓடுபாதையில் தயாராகிறது. ஏணிகள் இழுத்து எடுக்கப்பட்டன. கதவுகள் பூட்டப்பட்டன. விமானம் எழும்புவதாக பிரயாணிகளுக்கு அறிவுறுத்தப்படுகின்றது. விமானத்தின் சக்கரங்கள் உருளத்தொடங்குகின்றன. அதே வேளை வெள்ளை நிறக்கார் விமான நிலையத்தை நோக்கி வருகின்றது. விமான நிலையத்தின் பணிமனைக்கு அண்மித்ததும் - விமானக் கட்டுப்பாட்டாளர் தொலைத் தொடர்புச் சாதனத்தில் ஏதோ உத்தரவிடுகிறார். விமானப் பணிமனை முன்னின்ற வாகனம் விமானத்துக்கருகில் செல்ல அனுமதிக்கப்படுகின்றது. (வேறு வாகனங்கள் இவ்வாறு செல்ல அனுமதிப்பது வழக்கமல்ல) ஓடுபாதையில் ஓட ஆயத்தமாகிய விமானம் நிறுத்தப்படுகிறது. காரிலிருந்து சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் இறங்குகிறார். விமானத்தின் உடனுதவும்படி விரிகின்றது கார்டினர் விமானததுக்குள் இழுக்கப்படுகின்றார் விமானப்பயணம் தொடர்கின்றது. இவ்வாறு கவர்ச்சிகரமான வரவேற்புடன் - இராணுவமுகாம் வந்த பின்பும் விமான நிலையம் பொது மக்களின் சிவில் போக்குவரத்துக்குப் பயன்பட்டது.

அரசியல் பிரமுகர்கள் அடிக்கடி வந்து செல்லும் முக்கிய நிலையமாக பலாலி விளங்குகின்றது எமது மூத்த அரசியல் தலைவர்களது 'அரசியல் போட்டிக்கும்' பலாலி களமமைத்துக் கொடுத்தது.

### யார் மாலை போடுவது?

யாழ்ப்பாணத்து அரசியலில் இரண்டு துருவங்களாகச் செயற்பட்டு இறுதிக்காலத்தில்

### மாலைக்குள் ஏதோ பொருள்!

1973ஆம் ஆண்டில் ஒரு நாள்.. அப்போது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அதிகாரத்தில் இருந்தது. தபால் அமைச்சராகத் தமிழர் ஒருவர் 'நியமிக்கப்' பட்டார். ஒரு தமிழ் அமைச்சர் பலாலிக்குவர ஏற்பாடாகியது. அரச அதிகாரிகள் ஒழுங்குகளை மேற்கொண்டனர் அலங்காரங்கள், சோடனைகள், வரவேற்கும் திட்டங்கள் தயாராகின. தமிழ் இளைஞர்கள் பாராளுமன்ற அரசியலில் நம்பிக்கை இழந்து 'மாற்றுவழி' தேட ஆரம்பித்த காலம் அது. அரசாங்கத்தையும்—அமைச்சர்களையும் வரவேற்பதை இளைஞர்கள் விரும்பவில்லை, நேரடித்தாக்குதல்கள் எதுவும் அப்போது வேகம் பெறவில்லை. எனினும் அமைச்சருக்கு எதிர்ப்புக்காட்ட எண்ணினர். பாதுகாப்பு ஒழுங்கு பலப்படுத்தப்பட்டிருந்தது. வரவேற்புக்கு மாலைகள் மட்டும் அணிய அனுமதி கிடைத்தது, வரிசையில் மக்கள் மாலைகளுடன் நின்றனர். அவை அமைச்சருக்கு அணிவிக்கப்பட்டன. மாலை கழுத்தை மூடியது; முகத்தையும் மறைத்தது. முகத்துக்கு மேலாலும் மாலை போடப்பட்டது, அமைச்சர் அகமகிழ்ந்தார்—ஆதரவாளரின் கரகோசம் வானைப் பிளந்தது. இந்நிலை நீடிக்கவில்லை, திடீரென அமைச்சரின் கை கழுத்தை நோக்கி வேகமாக வந்தது, மாலைகள் பிரித்தெறியப்பட்டன. அமைச்சர் நிலைகுலைந்தார்; அவரின் முகம் சலனமடைந்தது. அமைச்சரைச் சுற்றிப் பித்தெறியப்பட்ட மாலைகள் அவரைப் பரிதாபமாகப் பார்ப்பதுபோன்று அசைவற்றுக் கிடந்தன. (வளரும்)

## உலக அரங்கில்

### 7 வியட்நாம் படகு அகதிகள் தீக்குளிப்பு!

ஹொங்கொங்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்த வியட் நாம் படகு அகதிகள் சிலர் அகதிமுகாமில் திடீர் என தீக் குளிக்க முயன்றுள்ளனர்.

இவர்களுக்கு அகதி அந்தஸ்து வழங்க முடியாது என ஹொங்கொங் அரசு கூறியதை ஆட்சேபித்தே இவர்கள் தீக் குளித்தனர்.

குறிப்பிட்ட அந்த முகாமில் இருந்த ஏழு அகதிகள் கடந்த ஒரு வாரமாக உணவு உண்ண மறுத்து வந்ததாக வும் திடீர் என நேற்று அவர்கள் தமக்கு வழங்கப்பட்ட போர்வைகளை உடலில் சுற்றிக் கொண்டு தீயைப் பற்ற வைத்தனர்.

எனினும் இவர்கள் உடனடியாக ஆஸ்பத்திரிக்கு முகாம் அதிகாரிகளால் எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. இவர்கள் தற்போது ஆபத்தான கட்டத்தை தாண்டி விட்டதாக தெரிவிக்கப்படுகிறது சம்பவம் நடை பெற்ற அகதி முகாமில் பதற்றம் தொடர்ந்து நிலவுகிறது.

இதேவேளை இச்சம்பவம் குறித்துக் கருத்து வெளி யிட்ட ஹொங்கொங் அரசு, படகு அகதிகள் அனைவருமே உண்மையான அகதிகள் அல்ல, சிலர் ஆடம்பரவாழ்விற் காகவும் தொழில் தேடியுமே ஹொங்கொங்கிற்குள் அகதி கள் என்ற போர்வையில் வர முயற்சிக்கின்றனர் எனக் குறிப்பிட்டுள்ளது.

### முஸ்லிம்களுக்கு பாக் ஆதரவு இந்தியா கண்டனம்

தற்போது இந்தியாவில் பல பாகங்களிலும் நிகழ்ந்து வரும் இந்து-முஸ்லிம் கலவரங்கள் குறித்து பாகிஸ்தான், முஸ்லிம்களுக்கு ஆதரவாக அறிக்கை வெளியிட்டுள்ளது, இந்தியாவுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது.

பாகிஸ்தான் இந்தியாவின் உள்விவகாரங்களில் தலை யிடுகிறது என்பதற்கு இது மேலும் சான்றாகிறது என்று இந்திய வெளியுறவு அமைச்சு கூறியுள்ளது. இதேவேளை கடந்த ஒரு வாரத்தில் இந்து, முஸ்லிம் கலவரங்களால் 230 பேர் பலியாகியுள்ளதாகக் தெரிவிக்கப்படுகிறது.

பல மாநிலங்களில் கலவரங்களைப் படையினரால் கட் டுப்படுத்த முடியாது இருப்பதாகவும், ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள போதே கலவரம் தொடர்வதாகத் தெரிவிக் கப்படுகிறது.

இதேவேளை ஆந்திர மாநிலம் ஹைதராபாத்தில் வெடித்துள்ள கலவரங்களை அடக்க தமிழ் நாடு பொலிஸார் அழைக்கப்பட்டுள்ளனர். இரு பட்டாலியன்கள் தற்போது ஆந்திரா சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே ஆந்திர முதலமைச்சர் டாக்டர் சென்னா ரெட்டி ராஜினாமா செய்து விட்டதாக அறிவிக்கப்பட் டுள்ளது.

### இந்தியக் கடற்படைத் தளபதியின் மருமகன் பாகிஸ்தானியர்

இந்தியாவின் புதிய கடற்படைத் தளபதி அட்மிரல் ராம்தாஸின் நியமனம் குறித்து இரு பத்திரிகையாளர்கள் தொடர்ந்த வழக்கைப் பம்பாய் உயர் நீதி மன்றம் நிராகரித் துள்ளது.

இப் பத்திரிகையாளர் தொடர்ந்த வழக்கின்படி, அட்மிரல் ராம்தாஸின் மகளின் கணவர் ஓர் பாகிஸ்தானி யர் எனவும் இத்திருமணம் அமெரிக்காவிலேயே நடைபெற்று விட்டது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கு பதிலளித்துள்ள அரச தரப்பு வழக்கறிஞர், ராம்தாஸின் மருமகனோ அல்லது அவரின் தந்தையோ பாகிஸ்தானிய ராணுவத்தில் அங்கம் வகிக்கவில்லை. அவர் கள் சாதாரண பாகிஸ்தானிய பிரஜைகளே எனக் குறிப்பிட்

யாழ் கல்விப்பணிப்பாளர் அறிவுரை

# "ஓய்வூதியத்தைக் கணக்கிடாது ஆசிரியர்கள் சேவை செய்ய முன் வரவேண்டும்"

.ஆசிரியர் தொழில் மிகப் புனிதமான ஒன்றாகக் கருதப்படுகிறது. தெய் வத்திற்கு அடுத்தபடியாக மருத்துவரும், ஆசிரியரும் மதிக்கப்படுகின்றனர். இதனை யுணர்ந்து அனுபமிக்க ஆசிரியர்கள் தற்போதைய அவலமிக்க கல்விச் சூழலில் மாணவர்களுக்குக் கல்விப் பணி புரிவதனை ஓர் மகத்தானசேவையாகக் கருதிச் செயற்பட வேண்டும்.,

இவ்வாறு வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா சுந்தரலிங்கம் நேற்று திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் நடை பெற்ற பலாலி ஆசிரிய கலா சாலை வளாகம் புகுவிழாவில் பேசுகையில் வலியுறுத்தி னார்.

கலாசாலை அதிபர் திரு. ஆர்.எஸ் நடராசா தலைமை யில் இடம்பெற்ற இவ்வைப வத்தில் கலாசாலை விரிவு ரையாளரான கவிஞர் சோ பத்மநாதன் வரவேற் புரை நிகழ்த்தினார்.

தொடர்ந்து பேசிய கல்விப் பணிப்பாளர்; "தற்போது மாணவ சமுதாயம் மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் இருக்கிறது. ஆசிரியர்கள் தம் அனுபவத்தை. ஆற்றலை மாணவர்களுக்குப் புகட்டுவ தனை விட்டு இளைப்பாற் றுப் பணத்தையும், வட்டி யையும் பற்றியே சிந்திக்கும் இழிநிலை மாறவேண்டும். நல்லாசிரியரை நாளைய சமு தாயம் மதிக்கும் ஆசிரியர்கள் தங்களுடைய இயலாமைக் காலங்களிலேயே இளைப்பா றுவதனைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்".

"பலாலி ஆசிரிய கலா சாலை மீண்டும் பலாலிக்கு செல்ல வேண்டிய காலம் விரைவில் வர வேண்டும்.

வடமாநிலத்தில் இருந்த ஐந்து கலாசாலைகள் தற் பொழுது சுருங்கி இரண்டா கியுள்ளன. இவ்வாறான நிலை மாறி பதினைந்து கலாசாலைகளாவது உருவாக் கப்பட வேண்டும்" எனவும் அவர் கூறினார்.

இவ்விஜாவின் நினைவாக கல்விப் பணிப்பாளர் பலா மரக் கன்று ஒன்றை கல் லூரி வளவில் நாட்டினார்.

விழாவில் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் ஆ. மகா லிங்கம், பலநோக்குக் கூட்டு றவுச் சங்கங்களின் சமாஜத் தலைவர் திரு சிவமகாராசா தமிழர் ஆசிரியர் சங்கச் செய லர் த. மகாசிவம், முத்துத் தம்பி மகாவித்தியாலய அதி பர் திருமதி. க. சிதம்பர நாதன் உட்பட பலரும் பேசினர். (70)

முல்லைத்தீவுக்கு

# கப்பலில் வரும் பொருட்களில் அரைப்பகுதி கிளிநொச்சிக்கு

முல்லைத்தீவுக்குகடல்மார்க் கமாக கொண்டுவரப்படும் அத்தியாவசிய உணவுப் பொருட்களில் அரைப் பங்கை கிளிநொச்சி மாவட்டத்திற்கு வழங்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு கே. மாணிக்க வாசகர் எடுத்த முயற்சியால் இந்த ஏற்பாடு செய்யப்பட் டுள்ளது.

இது தொடர்பாக அத்தியா வசிய சேவைகள் ஆணைக் குழு, முல்லைத்தீவு அரசாங்க அதிபருக்கு அறிவித்துள் ளது.

சப்டலில் இருந்து பொருட் கள் இறக்கப்பட்டதும் உடனடியாக அவை கிளி நொச்சிக்கு எடுத்து வரப்பட வுள்ளது.

கிளிநொச்சிக்கு லொறிகள் மூலம் கொண்டு வரப்படும் உணவுப் பொருள்களை பங் கிட்டுவழங்க போதாது இருப் பதாகவும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

ஆதே சமயம் கிளிநொச்சியில் உள்ள தனியார் கடைகளில் பங்கீட்டு முறையில் மண் ணெண்ணெய் சீனி என்பன குறைந்த விலையில், 3விநி யோகிக்கப்பட்டன. (ப6,35)

### கிளிநொச்சியில்...

கொண்டது.

இத்தாக்குதல் வேளையில் டிராக்டர்களில் இருந்தவர்கள் குதித்து மரங்களிற்குக்கீழ் மறைந்து கொண்டதனால் மூவர் மட்டுமே காயமடைந் தனர்.

காயமடைந்த ஆர். செல்வ ரட்ணம் (40) யோசேப்பு அலோசியஸ் (35), ஜி தவப் பிரகாசம் (22) ஆகியோர் யாழ் போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெறு கின்றனர். (ப-11,71,74,33)

### அதிகாரிகள்...

கொழும்புக்கு அழைத்துச்

# இலங்கை வங்கிக்கிளைகளில் பணக் கொடுப்பனவுகள்

எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை, நெல்லியடி, பருத்தித்துறை கிளைகளில் கீழ்க்கண்டவாறு பணக் கொடுப்பனவுகள் நடை பெறும் என அறிவிக்கப்பட் டுள்ளது.

பருத்தித்துறை கிளை 17 ஆம் திகதி, இதுவரை தமது ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை யாவது பணமாகப் பெறாத ஓய்வூதியக் காரருக்கு 2000 ரூபா வீதம் பணமாக வழங் கப்படும். வங்கிக்கு முதலில் வருபவர் என்ற அடிப்படை யிலும் பண இருப்பைப் பொறுத்தும் இது வழங்கப் படும்.

18 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை முதலில் வரும் 150 பேருக்கு 1000 ரூபா வரையில் பணமாக வழங்கப்படும்

நெல்லியடிக்கிளை 17 ஆம்

பனவுகள் அந்தந்தத் திகதிக ளில் வங்கியின் அறிவித்தல் பலகையில் அறிவிக்கப்படும் எனவும் மாவட்ட முகாமை யாளர் அறிவித்துள்ளார். (ப-11)

### கசரோகம்...

அரச செயலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளாமையி னாலேயே இப்பிரிவுகளில் மேற்படி கொடுப்பனவுகள் மேற்கொள்வதில் தாமதம் ஏற்பட இடமுண்டாகிறது.

இப்பணத்தினை உதவி அரச அதிபர்கள் திங்கட் கிழமை யாழ் செயலகத்தில் பெற்றுக் கொண்டதும் இப் பகுதிக்களுக்குரிய மேற்படி கொடுப்பனவுகள் மேற்கொள் ளப்படும்.

இந்த உதவிப்பணக் கொடுப்பனவுகளை மேற் கொள்வதற்குரிய கட்டுநிதி

### சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்க உறுப்பினருக்கு அழைப்பு

யாழ் மாவட்ட சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங் கங்களின் சமாச விசேட பொதுக் கூட்டம் நாளை 16 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நீர்வேலி தலைமைக் காரியாலயத்தில் நடைபெற வுள்ளது.

இதில் சகல அங்கத்துவ சங்கங்களின் பிரதிநிதிகளை யும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது 71)

### உங்களுடையதா?

திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் பன்னிரண்டாயிரம் ரூபா பெறுமதியான இலங்கை வங்கி காசோலை கண்டெடுக் கப்பட்டு முரசொலி அலுவல கத்தில் ஒப்படைக்கப்பட்டுள் ளது. உரியவர் ஆசிரிய பீடத் தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பாகிஸ்தானிய ராணுவத்தில் அங்கம் வகிக்கவில்லை. அவர்கள் சாதாரண பாகிஸ்தானிய பிரஜைகளே எனக் குறிப்பிட்டார். இதை உயர்நீதி மன்றமும் ஏற்றுள்ளது.

## வளர்ப்பு நாயைக் கடித்த இளைஞன்

நாய்க்கு மனிதன் கடித்தால் அது செய்தி என்பார்கள். இத்தகைய சம்பவம் ஒன்று தெற்கு பிரிட்டிஷ் நகரான பிறைட்டனில் நடந்துள்ளது.

தனது வளர்ப்பு நாயை கடுமையாகக் கடித்து காயப்படுத்தியமைக்காக 21 வயதான டேவிட் கோப்ஸ் என்பவருக்கு நூறு பவுன்ட் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

நாயைக் கடித்ததாக குற்றஞ் சாட்டி இவரை கைது செய்த மிருகவதை தடுப்பு ரோயல் கழகம், நாயின் மூக்கு பலமான முறையில் கடிக்கப்பட்டு காயப்படுத்தப்பட்டிருந்ததாக நீதிமன்றத்தில் தெரிவித்தனர். இதற்கு பதிலளித்த அவ்விளைஞன் நாயைக் கடித்தது உண்மைதான் ஆனால் பயிற்சியின் போது நாயின் மூக்கைக் கடிப்பது நல்ல ஓர் தண்டனை என ஓர் புத்தகத்தில் குறிப்பிட்டிருந்ததாக வாதாடினார்.

### குடா நாட்டுக் ...

பொதிகள் யாழ் மாநகரப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க லொறியில் எடுத்துவரப்பட்டது மிகுதி 22 தபால்பொதிகளும் வடமராட்சித் தபாலகங்களுக்கு நேற்று முன்தினம் எடுத்துச் செல்லப்பட்டன. (33)

### 10 எழுது...

இவ்வாறான இடமாற்ற உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை இன்னும் மேலதிகமானவர்களுக்கும் இவ்வாறு இடமாற்றம் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (70,74)

இப் பத்திரிகை முரசொலி பப்பிளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி, 'லக்ஷ்மிபில்டிங்' இல் உள்ள அச்சகத்தில் 15-12-90 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

கொழும்புக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

தபாற் சேவையும், போக்குவரத்துச் சீரற்றுள்ளமையும், நிதியாண்டு முடிவடைவதும் சுட்டிக்காட்டப்பட்டதையடுத்து இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இங்கிருந்து புறப்படும் கப்பல்களில் ஒரு தடவையில் குறைந்தது 10 அதிகாரிகள் இவ்வாறு கொழும்புக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள் எனவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (70)

### வடக்கு ..

பிட்டுள்ளார்.

ஜனாதிபதிக்கு இது தொடர்பாக இரு தடவைகள் அவர் கடிதம் எழுதியுள்ள அந்தப் பௌத்த பிக்கு, குறிப்பிட்ட அதிகாரி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், தமிழ்த் தீவிரவாதிகளுக்கு அவர் உதவி செய்வதை நிறுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி செயலகம் இவரது புகார் குறித்து நடவடிக்கை எடுக்கும் என அவருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதாம்.

நெல்லியடிக்கிளை 17 ஆம் திகதி ஓய்வூதியக்காரருக்கு 1500 ரூபா வழங்கப்படும். 18 ஆம் திகதி தொடக்கம் வழங்கப்படும் பணக் கொடுப்

### கிழக்கு ..

பருப்பு மிளகாய்த்தூள், பயறு கருவாடு, உழுந்து ஆகிய உணவுப் பொருட்களை வழங்கவுள்ளது.

அத்துடன் ஒவ்வொரு குடும்பத்துக்கும் 750ரூபா பெறுமதியுள்ள பானை, சட்டி உணவுக் கோப்பை, வாளி, கத்தி, திருவலை, அரிதட்டு, லாம்பு முதலிய நாளாந்த பாவனைப் பொருட்களையும் வழங்கவிருக்கிறது.

குடாநாட்டில் அகதிமுகாம்களில் தங்கியுள்ள குடும்பங்களின் தொகை, அங்கத்தவர் தொகை ஆகிய விபரங்களைத் திரட்டி உடனடியாக சமர்ப்பிக்குமாறு இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ்ப்பாணப் பிரிவுத்தலைவர் டாக்டர் தெய்வேந்திரன் சகல முகாம் பொறுப்பாளர்களையும் ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலுமுள்ள இலங்கைச் செஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதிகளையும் கேட்டுள்ளார். (18)

கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்குரிய கட்டுநிதி இருந்தும், பணம் இல்லாமை காரணமாகவே இக்கொடுப்பனவுகள் காலங்கடந்து மேற்கொள்ளப்படுகின்றன.

யாழ் சமூக சேவைப் பிரதிப் பணிப்பாளர் திருமதி கமலா சிவசிதம்பரம் யாழ் அரச அதிபருடன் தொடர்பு கொண்டே இப்பணத்தைப் பெற்று உதவி அரசாங்க அதிபர்களுக்கு வழங்கியுள்ளார்.

1990-ம் ஆண்டின்மீதமான மாதங்களுக்கான கொடுப்பனவுகளும் கூடிய விரைவில் மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சமூக சேவைப் பிரதிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (47)

### அச்சேறிய ..

காலத்தால் முந்தியது பிந்தியது என்ற வேறுபாடின்றி அனைத்து பிரதிநிதிகளிடமிருந்து 10 பிரதிகள் வாங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (71)

### ஒரு வாரத்துக்கே ..

ஆனால் ஒரு கிழமைக்கே போதுமானது என்றும் சுகாதார திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த ஆறுமாதங்களாக போஷாக்குக்குறைபாட்டினால் கர்ப்பிணித் தாய்மார்களும், பாலூட்டும் தாய்மார்களும் பாதிக்கப்பட்டுள்ளனர் 74,70

மீண்டும் பழைய இடத்தில்
'றேடியோஸ் பதி'
58, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
12102